## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து அதிகார சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அதனுடன் சம்பந்தபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகார சபை தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் அதிகார சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை

தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ் வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

  இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க அதிகார சபை செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளக கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிகைையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேனுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைடையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவனங்களிற்கு அவசியமானதாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இல் 14 வது உறுப்புரையின் பிரகாரம் மீளாய்வாண்டில் அதிகார சபையினால் 02 வீட்டு முறைகளினால் ரூபா 1.08 மில்லியன் கடன் தவணைப்பணம் அறவிடப்பட்டிருப்பினும் அச் சொத்துக்களின் பெறுமதி நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து வீட்டு முறைகளாலும் மீளாய்வாண்டில் அறவிடப்பட்ட கடன் தவணைப் பணத்தின் பெறுமதி முறையாக சொத்துக்களுடன் சீராக்கப்பட்டு நிதி நிலைமை கூற்றினுள் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் படி வீட்டு முறைகளின் பிரதிலாபம் அதிகார சபை பெற்றுக்கொள்வதனால் இந்த வீட்டுத்திட்டம் அதிகார சபையின் சொத்தாக கணக்கிலிடப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்ளைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கிரயம் ரூபா 36.49 மில்லியன் பெறுமதியான 04 நிலையான சொத்து உறுப்படிகளுக்கு தொடர்பாக வருடாந்த பெறுமானத்தேய்வு கணக்கிடப்படாது இருந்ததுடன் அச் சொத்துக்கள் என்ன என்று அடையாளப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | துல்லியமாக பெறுமானதேய்வை கணக்கிலிடப்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் வருங்காலத்தில் இந்த சொத்து மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அச் சொத்துக்களின் புதிய புத்தக பெறுமதி கணக்கிலிடப்பட எதிர்பார்க்கப்படுகின்றது. | அதிகார சபைக்கு சொந்தமான சொத்துக்கள் சரியாக அடையாளப்படுத்தப்பட்டு கணக்கிலிடப்பட வேண்டியதுடன் அச் சொத்துக்களின் பெறுமான தேய்வு செலவு சரியாக அடையாளப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) கணக்கீட்டு கொள்கை இல 1.1.3 (ii) பிரகாரம் அதிகார சபையினால் நடைமுறை அல்லாத சொத்துக்கள் 05 வருடங்களுக்கு ஒரு முறை மீள்மதீப்பீடு செய்யப்படும் என காண்பிக்கப்பட்டிருந்தாலும், மீளாய்வாண்டு இறுதி வரையிலும் எந்தவொரு சொத்தும் மீள்மதீப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்போது சொத்து மீள்மதீப்பீடு செய்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | கணக்கீட்டு கொள்கை / நியமம் பிரகாரம் சொத்து ஆலை உபகரணங்கள் காலத்திங்கு காலம் மீள்மதிப்பீடு செய்தல் வேண்டும். |

### 1.5.4. கணக்கீட்டுக் குறைப்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அநுராதபுர “ துருஇதுருகம ஹரித குடியிருப்பு செயற்திட்டத்தில்” 21 வீட்டு பயனாளிகளிடமிருந்து மீளாய்வாண்டு இறுதியில் பெறப்பட வேண்டிய கடன் தவணை பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் பெறப்பட்டிருந்த கடன் தவணை வருமானம் ரூபா 361,700 மட்டும் வேறு வருமானமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | துருஇதுருகம வீட்டு செயற்திட்டத்திற்காக 2015 இல் ஒப்பந்தத்தை திருத்துவதற்காக அதிகார சபை எடுத்துள்ள தீர்மானத்திற்கு அமைவாக செயற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் இன்னும் கையொப்பமிடாத பயனாளிகளிடமிருந்து பெறப்பட வேண்டிய தவணை பணம் அடையாளப்படுத்துவதற்கு <u>அடிப்படையொன்று இல்லாததுடன்</u> அது கடன் தொகைக்குள் உள்ளடங்கியுள்ளது. அத்துடன் அக் கடன் தவணை வருமானம் வேறு வருமானமாக நிதிக் கூற்றுக்களில் <u>குறிப்பிடப்படவில்லை.</u> | வீட்டு பயனாளிகளுடன் ஒப்பந்தங்களுக்கு அனுக வேண்டியதுடன் ஒப்பந்தங்களின் பிரகாரம் பெறப்பட வேண்டிய கடன் தவணை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் அதிகார சபையினால் விசிரி வீட்டு கடன் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் பெற்றுக்கொடுக்கப்பட்ட கடனுக்காக மீளாய்வாண்டு இறுதியில் பெறப்பட வேண்டிய ரூபா 33,071,556 இற்காக மட்டும் ரூபா 1,653,578 ஆன மேலாண்மைக் கடன் ஒதுக்கப்பட்டிருப்பினும் மீளாய்வாண்டு இறுதியில் பெறப்பட வேண்டிய ரூபா 95,110,286 ஆன மற்றைய கடன் மீதிகளுக்காக மேலாண்மை கடன் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அக் கடன் மீதிகளுக்காக மேலாண்மை கடன் ஒதுக்கப்பட வேண்டிய முறையும் அதிகார சபையினால் அடையாளப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | விசிரி கடன் நிகழ்ச்சி திட்டம் தவிர அதிகார சபையினால் செயற்படுத்தப்பட்டுள்ள மற்றைய கடன் செயற்திட்டங்கள் வீட்டு கடன் திட்ட முறைகள் ஆகும். கடைசி கடன் தவணை செலுத்தி முடியும் வரையில் அச் சொத்தின் உரிமை அதிகார சபைக்கு உரித்துடையதாகும். அதனால் விசிரி கடனுக்காக மட்டும் மேலாண்மை கடன் ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | அதிகார சபையின் கணக்கீட்டு கொள்கைகளுக்கு அமைவாக பெறப்பட வேண்டிய மொத்த கடனுக்காக மேலாண்மை கடன் ஒதுக்கம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அநுராதபுர துரு இதுருகம பிரதேசத்தில் குளிர்பதன தொழில்நுட்பத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 09 வீடுகள் மற்றும் அதற்கு தொடர்புடைய காணிகளின் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் காணி மற்றும் கட்டிடத்தின் கீழ் காட்டப்பட வேண்டும். எனினும் அவ்வாறு காட்டப்படாததனால் நிதி நிலைமைக் கூற்றில் காணி மற்றும் கட்டிடத்தின் பெறுமதி அப் பெறுமதியிலே குறைந்து காணப்பட்டது. | இதற்கு தொடர்புடைய தேவையான சீராக்கல்கள் வருங்காலத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். | நிலையான சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு கணக்கிலிடப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் அதிகார சபை ஒப்பந்தகாரரொருவருக்கு செலுத்த வேண்டிய ரூபா 444,382 செலுத்தப்பட வேண்டிய மீதிகளாக கணக்கிலிடப்படாததனால் நிதி நிலைமைக் கூற்றின் நடைமுறை பொறுப்பு அப் பெறுமதியிலே குறைந்து காணப்பட்டது. | இவ் ஒப்பந்தத்திற்கு தொடர்பாக பூர்த்தி செய்யப்படுகின்ற வேலைகள் தொடர்பாக இறுதி பட்டியல் தயாரித்தலில் ஏற்பட்ட தாமதத்தினால் செலுத்தப்பட வேண்டிய பெறுமதி அடையாளப்படுத்தப்பட முடியாத காரணத்தினால் தொடர்புடைய வருடத்தில் கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை. | செலுத்தப்பட வேண்டிய மீதிகள் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை பொறுப்பின் கீழ் காட்டப்படுதல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாணணடில் மற்றும் கடந்த வருடத்தில் அதிகார சபையினால் அகற்றப்பட்ட 03 மோட்டார் வாகனங்களுக்காக பெறப்பட்ட ரூபா 5,423,025 ஒருங்கினைந்த நிதிக்கு வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் அப் பணம் அதிகார சபையின் செலவொன்றாக காட்டப்பட்டிருந்ததன் காரணத்தினால் மீனாய்வாண்டில் அதிகார சபையின் பற்றாக்குறை அப் பெறுமதியிலே மிகையாக காணப்பட்டது. | சட்டரீதியான நிறுவனங்களினால் சொத்துக்கள் அகற்றலின் போது பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டு முறைகளினுள் அகற்றலினால் பெறப்பட்ட நிகர இலாபம் அல்லது நட்டம் அடையாளப்படுத்தப்பட்டதின் பின்னர் மேற்கொள்ளப்படும். அதற்கு மேலாக ஒருங்கினைந்த நிதிக்கு வரவு வைக்கப்படல் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய சீராக்கல்கள் கணக்காய்வு ஆலோசணைகளுக்கேற்ப மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | சொத்துக்கள் அகற்றலின் ஊடாக பெறப்பட்ட நிகர இலாபம் அல்லது நட்டம் அடையாளப்படுத்தப்பட்டு அப் பெறுமதி மட்டும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றினுள் காட்டப்படல் வேண்டும். ஒருங்கினைந்த நிதிக்கு வரவு வைத்தல் அதிகார சபையின் வெகுஜனத்துடன் சீராக்கல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 02 வீட்டு செயற்திட்டங்களின் 161 வீடுகள் கிரயத்திற்கும் மேல் குறைவாக மற்றும் சுதந்திர கொடுப்பணவு பத்திரத்தின் அடிப்படையில் பெற்றுக்கொடுத்தல் காரணமாக மீளாய்வாண்டில் திறைசேரி வழங்கல்களில் (Treasury Grant) ரூபா 62,937,739 எழுதப்பட்டு தவிர (write off) இருந்ததுடன் இதற்காக திறைசேரி அனுமதியும் பெறப்பட்டிருக்கவில்லை. | அகுலான வீட்டு செயற்திட்டத்தில் வெட்டுவதற்கான கவரின் அனுமதி பெற்றுக்கொள்வதற்காக திறைசேரிக்கு முன்வைப்பதற்காக வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. ரஜ்கம செயற்திட்டத்தினூடாக சுனாமி அனர்த்தத்திற்கு அகப்பட்ட 39 குடும்பங்களுக்காக வீட்டு கொடுப்பணவாக பெற்றுக்கொடுப்பதற்காகஅமைச்சரவை அனுமதி 17/2s/7s/736/047 ஊடாக பெறப்பட்டுள்ளது. | திறைசேரி வழங்கல் அடிப்படையில் நிர்மாணிக்கப்படுகின்ற நிர்மாணிப்புகளுக்கு ஏற்கப்படுகின்ற கிரயம் எழுதப்பட்டு தவிர்ப்பதற்காக திறைசேரி அனுமதி பெறப்படுதல் வேண்டும். |
| (எ) | திருகோணமலை வீட்டு செயற்திட்டத்திற்காக 2013 ஆம் ஆண்டில் அதிகார சபைக்கு பெறப்பட்ட ரூபா 25 மில்லியன் திறைசேரி வழங்கல் மீண்டும் 2015 இல் திறைசேரிக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் கணக்கு வைத்தலின் குறைப்பாட்டினால் அதில் ரூபா 5 மில்லியன் அங்குலான செயற்திட்டத்தின் கிரயத்திலிருந்து குறைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அப் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்காததன் காரணத்தினால் அவ் வீட்டு செயற்திட்டத்தின் கிரயம் அப் பெறுமதியிலேயே குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. | திருகோணமலை செயற்திட்டத்திற்கு தொடர்பாக பெறப்பட்டிருந்த ரூபா 25 மில்லியன் மீண்டும் 2015 இல் விடுவிக்கப்பட்ட போது குறிப்பிடுவதில் நேர்ந்த குறைப்பாட்டினால் ஏற்படடிருக்கின்ற இந்த நிலை முன்னோக்கிய கணக்குகளினுள் சரியாக முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | திறைசேரியினூடாக பெறப்பட்ட வழங்கல் மீண்டும் விடுவிக்கப்படல் சரியாக அடையாளப்படுத்தப்பட்டு கணக்கிவிடப்படல் வேண்டும். |

### 1.5.5 அதிகார சபையின் தொடர்ந்து இயங்கல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2008 இன் 36 இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 16(3) இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், அதிகார சபையின் ஆரம்ப மூலதனம் ரூபா 5,000 மில்லியன் ஆக வேண்டியதுடன் அது பகுதிகளாக ஒருங்கிணைந்த நிதியிலிருந்து பெறப்படவேண்டியிருப்பினும் 2018 இறுதி வரையிலும் அதிகார சபைக்கு எந்தவொரு மூலதனமும் பெற்றுக்கொடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>அத்துடன் 2008 இன் 36 இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 16(உ) இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், குறைந்த செலவுடைய வீட்டு செயற்திட்டங்களுக்கு பணம் வழங்குவதற்காக சொத்துக்கள் அபிவிருத்தி செய்வோரிடம் சேவை கட்டணமாக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் சேர்க்கப்பட்ட அனைத்து பணமும் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நிதிக்கு வரவு வைக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும் 2010 திசெம்பர் 14 ஆம் திகதிய 10/2951/504/012 இலக்கமுடைய அமைச்சரவையின் தீர்மாணத்தின் படி நகர அபிவிருத்தி அதிகார சபையினால் இச் சேவை கட்டணம் அறவிடல் நிறுத்தப்பட்டிருந்ததனால் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு அதன் பிரதான வருமான வழி இல்லாது போயிருந்தது. | ஆரம்ப மூலதனம் ரூபா 5,000 மில்லியன் மற்றும் அதிகாரம் இல்லாது மேற்கொள்ளப்படுகின்ற சொத்து அபிவிருத்தி செய்வோரிடமிருந்து அறவிடப்பட்டிருந்த சேவை கட்டணம் மீண்டும் அறவிடப்படுவதற்காக அமைச்சரவை பத்திரிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. சேவைக் கட்டணம் மீண்டும் அதிகாரப்படுத்தல் தொடர்பாக இதுவரை முன்னைக்கப்பட்டிருந்த அமைச்சரவை பத்திரங்களில் தீர்மாணமொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. சேவைக் கட்டணம் தற்போது நிலுவையாகவுள்ள ரூபா 207.00 மில்லியன் பெற்றுக்கொடுப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை உடன்பட்டிருப்பினும் அதிகார சபையின் நிகழ்கால நிதி நிலைமையின் அடிப்படையில் செலுத்துவதற்கு கடினம் என தெரிவிக்கப்பட்டுள்ளது, | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், திறைசேரியுடன் கலந்துரையாடி ஆரம்ப மூலதனத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதிகார சபையின் மொத்த வருமானத்தில் 90 சதவீதம் அரச வழங்கல்களினால் பெறப்படுவதுடன் செயற்பாட்டு முறைகளின் அடிப்படையில் சம்பாதித்தல் 10 சதவீதம் மாத்திரமாகும். இந்த நிலை மேம்படுத்திக்கொள் வதற்கு அமைச்சு மற்றும் திறைசேரியுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1. பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) விசிரி வீட்டு கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் முதலாவது கட்டத்தின் கீழ் பெறப்பட வேண்டிய தவணை பெறுமதி ரூபா 25,705,704 ஆவதோடு அதில் 01 தொடக்கம் 02 வருடங்களுக்கிடையில் மீதி ரூபா 6,363,755 உம் 02 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி | குறைந்த வருமானம் ஈட்டுவோருக்காக செயற்படுத்தப்பட்ட இந்த கடன் திட்டத்தின் கீழ் தற்போது கொடுப்பணவு செலுத்துவதற்கு தவருகின்ற பயனாளிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | கடன் தவணைக் கட்டணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 11,291,740 ஆக காணப்பட்டது. அத்துடன் இந் நிகழ்ச்சி திட்டத்தின் இரண்டாவது கட்டத்தின் கீழ் பெறப்பட வேண்டிய தவணை பெறுமதி ரூபா 7,365,852 ஆவதோடு அதில் 01 தொடக்கம் 02 வருடங்களுக்கிடையில் மீதி ரூபா 2,119,094 உம் 02 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 1,542,744 ஆகவும் காணப்பட்டது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கு தொடர்புடைய அங்குலான வீட்டு கூலி வருமானம் ரூபா 11,330,355 ஆகியதுடன் வருடத்தினுள் அறவிடப்பட்ட கூலி வருமானம் ரூபா 923,537 ஆகியது அதிகார சபை அறவிடப்படாத கூலி வருமானம், மொத்த கூலி வருமானத்தில் 92 சதவீதமாக காணப்பட்டது. | அங்குலான சயுர புர மாடி வீடு கடன் செயற்திட்டத்திற்காக கடன் அறவிடல் ஊக்குவித்தல் தொடர்பாக அவதானிக்கப்பட்டுள்ளதுடன் கடன் செலுத்தாதவர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கவும் அவதானிக்கப்படுகின்றது. | கூலி வருமானம் சேர்த்தல் தொடர்பான கட்டுப்பாட்டு முறை திடமாக்கல் வேண்டும். |
| (இ) | துருஇதுருகம வீட்டு செயற்திட்டத்தின் விற்றல் மற்றும் மறுமலர்ச்சி அடிப்படையில் பெற்றுக்கொடுக்கப்பட்ட 99 வீடுகளுக்காக மீளாய்வாண்டில் ரூபா 2,054,917 பெற வேண்டியிருப்பினும் பெறப்பட்ட பணம் ரூபா 1,047,338 ஆனது அறவிடப்படாத தவணைகளின் பெறுமதி பெறப்பட வேண்டிய தவணை பெறுமதியின் 51 சதவீதமாகும் | துருஇதுருகம வீட்டு செயற்திட்டத்தின் கடன் ஒப்பந்தங்கள் முறையாக கையொப்பமிடப்பட்டு பூர்த்தி செய்வதை குறித்து தற்போது அவதானிக்கப்பட்டு வருவதுடன் ஒப்பந்தத்தின் பிரகாரம் நடக்காத பயனாளிகளுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடன் தவணைக் கட்டணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த (Retention) பணங்களின் மொத்தம் ரூபா 1,299,416 ஆகியதுடன் அதில் ரூபா 1,188,855, 1 தொடக்கம் 05 வருடங்கள் வரை காணப்பட்டதுடன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 110,561 ஆக காணப்பட்டது. | அறவிடலை ஊக்குவிப்பதற்கு அவதானிக்கப்பட்டு வருவதுடன் கடன் அறவிடல் முகாமைத்துவத்திற்காக வேறாக ஊழியர்கள் பணியமர்த்த தேவை இருப்பதனால் அது தொடர்பில் எதிர்காலத்தில் முறையாக கவனம் செலுத்துகின்றேன். | நிறுத்தி வைக்கப்பட்ட பணம் காலத்திற்கேற்ப தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் இன்னுமாக குறிப்பிடுவதற்கு பொறுப்பற்ற மீதிகள் அடையாளம் காணப்பட்டு வருமானமாக கணக்கிலிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டு இறுதியில் 02 வீட்டு செயற்திட்டங்களின் நிலுவை கூலி வருமானம் ரூபா 8,882,175 ஆகியதுடன் அதில் 02 தொடக்கம் 05 வருடங்களுக்கிடையில் மீதி ரூபா 3,114,643 உம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 3,194,859 ஆக காணப்பட்டது. அத்துடன் விற்றலின் அடிப்படையாக பெற்றுக்கொடுக்கப்பட்ட 03 வீட்டு செயற்திட்டங்களின் நிலுவை கடன் தவணை பெறுமதி ரூபா 33,353,705 ஆகியதுடன் அதில் 02 தொடக்கம் 05 வருடங்களுக்கிடையில் காணப்பட்ட மீதி ரூபா 10,930,403 ஆகியதுடன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 13,398,280 ஆக காணப்பட்டது. | அறவிடலை ஊக்குவிப்பதற்கு அவதானிக்கப்பட்டு வருவதுடன் கடன் அறவிடல் முகாமைத்துவத்திற்காக வேறாக ஊழியர்கள் பணியமர்த்த தேவை இருப்பதனால் அது தொடர்பில் எதிர்காலத்தில் முறையாக கவனம் செலுத்துகின்றேன். | கடன் தவணை மற்றும் கூலி வருமானம் அறவிடுவதற்கு விரைவான மற்றும் போதுமான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2008 இன் 36 இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டம் | நகர குடியிருப்பு அபிவிருத்திக்கு தொடர்புடைய தேசிய கொள்கையொன்று தயாரிப்பதற்காக மற்றும் அந்த கொள்கை செயற்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக அதிகார சபை நிறுவப்பட்டிருப்பினும், அதிகார சபை நிறுவப்பட்டு 10 வருடங்கள் கடந்திருப்பினும் தேசிய கொள்கையொன்று தயாரிப்பதற்கு மற்றும் செயற்படுத்துவதில் அதிகார சபை தோல்வியடைந்து காணப்பட்டது. | ஆலோசனை குழுவினால் வரையப்பட்ட குடியிருப்பு அபிவிருத்திக்கு தொடர்புடைய தேசிய கொள்கைக்காக முகாமைத்துவம் திருப்தியாகாத நிலையில் அமைச்சின் தலையீட்டுடன் தொடர்புடைய கொள்கை வரைவதற்கான புதிய நிபுணர் சபையொன்று பணிக்கப்படுவதற்கு தீர்மாணிக்கப்பட்டுள்ளது. | கூட்டுறவு சட்டத்தின் நோக்கங்களுக்கு உடன்பட்டு அந் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | நி.பி 371 (2) (ஆ) | மீளாண்வாண்டினுள் 77 சந்தர்ப்பங்களின் போது 37 ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,264,256 ஆன முற்பணம் தீர்ப்பதற்கு 35 தொடக்கம் 360 நாட்கள் வரையான காலம் எடுக்கப்பட்டிருந்தது. அத்துடன் முற்பண எல்லைக்கு மேற்பட்டு 14 சந்தர்ப்பங்களில் ரூபா 3,610,000 முற்பணம் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது. | நிகழ்ச்சிகளுக்காக விரைவில் ஏற்க்கப்பட் வேண்டியதென உயர் முகாமைத்துவம் சந்தர்ப்பத்திற்கேற்ப தீர்மாணிக்கின்ற செலவிற்காக இவ்வாறு முற்பணம் பெறப்பட்டுள்ளது. முற்பணம் பெற்றுக்கொடுக்கக்கூடிய உச்ச எல்லைக்குட்பட்பதாக தேவையான முற்பணம் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்று உயர் முகாமைத்துவத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. | நிதி பிரமாணத்தின் பிரகாரம் பெற்றுக்கொடுக்கின்ற முற்பணம் வேலை முடிந்தவுடனே தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் முற்பண எல்லைக்கு மேற்படாதவாறு முற்பணம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நி.பி 770 | வருடாந்த பௌதீக பொருள் ஆய்வின் போது அடையாளப்படுத்தப்பட்ட அகற்றப்பட வேண்டிய 40 உறுப்படிகளுக்கு சொந்தமான 155 பொருட்கள் தொடர்பாக நிதி ஏற்பாட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது வரையில் அகற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது முன்னர் காணப்பட்ட முறையொன்றின் பிரகாரம் ஆகும். எனினும் தற்போதிருந்து நி.பி 770 பிரகாரம் பொது 47 படிவத்திற்கமைய மேற்கொள்ளப்படும் என குறிப்பிடுகின்றேன். | பொருள் அகற்றல் நிதி பிரமாணத்தின் பிரகாரம் மேற்கொள்ளல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவ் ரூபா 31,002,552 பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா 19,844,291 ஆக காணப்பட்டது. அதன்படி நிதி விளைவில் ரூபா 11,158,261 மிகையொன்று அவதானிக்கப்பட்டது. கூலி வாகன செலவு அதிகரித்தல் மற்றும் இடர் கடனுக்காக நிதி ஏற்பாடு ஒதுக்கல் இந் நிலைக்கு பிரதான காரணங்களாக காணப்பட்டன.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் சம்பளச் செலவு (ஒப்பந்த அடிப்படையில்) 100 சதவீதமாகவும் கட்டிட மேம்படுத்தல் மற்றும் பராமரிப்பு செலவு 240 சதவீதமாகவும் வேறு செலவு (வழங்கல்) முறையாக 280 சதவீதமாகவும் சட்டச் செலவு மற்றும் குத்தகை தவணை செலுத்தல் முறையாக 155 சதவீதம் மற்றும் 58 சதவீதமாகவும் அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டு மற்றும் கடந்த 03 வருடங்கள் அரசின் வழங்கல் தவிர அதிகார சபையின் நிகர சொத்து மறை பெறுமதியை கொண்டிருந்தது.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிகர நட்ட விகிதம் 273 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் கூலி வாகன செலவு அதிகரித்தல் மற்றும் இடர் கடனுக்காக நிதி ஏற்பாடு ஒதுக்கல் இந் நிலைக்கு பிரதான காரணங்களாக காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்ட மற்றும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற 05 வீட்டு திட்ட முறைகளில் காணப்படுகின்ற 863 வீட்டு அலகுகளுக்கு தொடர்புடைய 12.32 ஹெக்டயர் காணி வெவ்வேறு நிறுவனங்களினால் கையகப்படுத்திக்கொள்ள 2011 ஆம் ஆணடிலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பினும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அக் காணி கையகப்படுத்திக்கொள்ள முடியாது காணப்பட்டது. அக் காரணத்தினால் வீட்டு பயனாளிகளுக்கு வீட்டு பத்திரம் பெற்றுக்கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டிருப்பது கணக்காய்வின் போது இன்னுமாக அவதானிக்கப்பட்டது. | அரச காணி கையகப்படுத்தல் செயற்பாட்டின் போது அரச பொறிமுறையில் உள்ள தாமதம் காரணமாக 05 வீட்டு செயற்திட்டங்கள் (அங்குலான, சிங்ஹபுர, வதுலுசெவன, லூனாவ, தலவாக்கலை) கையகப்படுத்தல் நிறைவு செய்வதற்கு முடியாதுள்ளது. காணி கையகப்படுத்தலின் போது அதிகார சபையினால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தற்போது செயற்படுத்தப்பட்டுள்ளதுடன் காணி சொந்தமான நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளில் தாமதம் காரணமாக காணி கையகப்படுத்தல் முழுமையாக நிறைவு செய்வதற்கு முடியாது காணப்பட்டது. அநுராதபுர, சிலாபம் மற்றும் சஹஸ்புர காணி கையகப்படுத்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. பத்திரம் பெற்றுக்கொடுப்பதில் இடர் இல்லை. சஹஸ்புர வீட்டு பத்திரம் வெளியிடப்பட்டு வருகிறதுடன் அநுராதபுர, சிலாபம் மற்றும் சஹஸ்புர சில பயனாளிகள் கட்டணம் செலுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்படாததனால் வீட்டு பத்திரம் வெளியிடல் நடவடிக்கை மேற்கொள்ள இயலாது காணப்பட்டது. | வீட்டு பயனாளிகளுக்கு அவ் வீடுகள் சட்ட ரீதியாக கையகப்படுத்திக் கொடுப்பதற்காக காணிகளின் உரிமை அதிகார சபைக்கு கையகப்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) அதிகார சபையினால் மீளாய்வாண்டு இறுதியில் திறைசேரியின் வழங்களினூடாக ரூபா 1,172 மில்லியன் செலவிடப்பட்டு லூனாவ வீட்டுதிட்ட முறைமைக்காக 380 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருப்பினும் 2012 மார்ச் 22 திகதி விடய | பின்வருமாறு குறிக்கப்பட்ட 03 குழுக்கள் 356 வீடுகள் அகற்றுவதற்கு அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதற்காக வரையப்பட்ட அமைச்சரவை பத்திரம் அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.<br>• மறுசீரமைப்பு அடிப்படையில் வீட்டு அலகுகள் - 56 | அமைச்சரவையின் தீர்மானத்திற்கு அமைய நகர குடியிருப்பு குடும்பங்களை அடையாளப்படுத்திக்கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்புடைய அமைச்சர் முன்வைத்த குறிப்பாணையின் 3 ஆவது உறுப்புரையின் பிரகாரம் அவ் வீடுகளில் குடியேருவதற்கு மொரட்டுவ நகர சபை எல்லையில் குடியிருக்கின்ற குறைந்த வசதிகளுடைய 356 நகர குடியிருப்பு குடும்பங்கள் அடையாளப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | • விளையாட்டு மற்றும் கலை போன்ற துறைகளில் திறமையுள்ள மற்றும் விசேட தேவைகளுள்ள நபர்கள் - 32<br>• அரச , அரை அரசு மற்றும் தனியார் துறைகளில் பணி புரிகின்ற மத்திய வருமான பயனாளிகள் - 268 | |
| (இ) | மீளாய்வாண்டில் திறைசேரி வழங்களின் அடிப்படையில் அதிகார சபையினால் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 1,270.08 பெறுமதியான 07 செயற்திட்டங்கள் எந்தவொரு நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அடைவதற்கு அதிகார சபையினால் இயலாமல் காணப்பட்டது. இந்த நிலைமை அதிகார சபையின் பலவீனமாக மேலும் அவதானிக்கப்பட்டது. | மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தின் அடிப்படையில் தொடர்புடைய அனுமதிகள் / பரிந்துரைகள் பெறப்படாமையின் அடிப்படையில் (தேசிய திட்மிடல் திணைக்களத்தின் அனுமதிகள் / பரிந்துரைகள்) செயற்படுத்துவதற்கு திறன் பெறப்பட்டது தொடர்புடைய அனுமதியின் அடிப்படையில் நிதி ஏற்பாடு பெறப்பட்ட மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சி மட்டுமே. 2018.12.31 திகதிக்கு மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சியின் பௌதீக முன்னேற்றம் 83 சதவீதமாக இருந்ததுடன் நிதி முன்னேற்றம் ரூபா 19.96 மில்லியனாக காணப்பட்டது. | திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களின் பணிகள் தொடர்புடைய திட்டங்களுக்கமைவாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயல்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தலவாக்கலை லிந்துலை வீட்டு செயற்திட்டம்.<br><br>இந்த வீட்டு செயற்திட்டத்தின் கீழ் 100 வீட்டு அலகுகள் நிர்மாணிப்பிற்காக ரூபா 84.5 மில்லியன் திறைசேரியினால் நிதி ஏற்பாடு அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் செயற்திட்டம் 2013 இல் ஆரம்பிக்கப்பட்டு 2014 இல் நிறைவு செய்வதற்கு | | |

| | | | |
|---|---|---|---|
| | திட்டமிடப்பட்டிருந்தது. இது தொடர்பான அவதாணிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளது. | | |
| (I) | நிறைவு செய்யப்பட்ட 54 வீடுகள் மீளாய்வாண்டு இறுதி வரையில் 04 வருடங்களாக பயனாளிகளுக்கு ஒப்படைக்காத காரணத்தினால் வீடுகளுக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்ததுடன் அவ் வீடுகள் மீண்டும் மேம்படுத்த தேவையான நிலையில் இருக்கிறன என்பது அவதானிக்கப்பட்டது. | 54 வீடுகளில் ஒரு வீடாயினும் இது வரையில் சட்ட ரீதியாக உடன்படிக்கை செய்யப்பட்டு பயனாளிகளுக்கு ஒப்படைக்ககப்பட்டிருக்கவில்லை. பயனாளிகளுடன் உடன்பட்டு சட்டரீதியாக சாவிகளை ஒப்படைத்தல் 2019 ஆகஸ்ட் மாதத்திற்கு முன்னர் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. | வேலை முடிந்த வீட்டு செயற்திட்டங்களுக்கு புதிய வீடுகள் விரைவாக பயனாளிகள் அடையாளப்படுத்திக்கொண்டு குடியேறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | செயற்திட்த்தினூடாக மறுமலர்ச்சி அடிப்படையில் 60 வீட்டு அலகுகள் பெற்றுக்கொடுப்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும் 54 வீட்டு அலகுகள் மட்டும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதில் செயற்திட்ட நோக்கங்களுக்கு மாறாக மறுமலர்ச்சிக்கு தொடர்பில்லாத 10 நபர்களுக்கு செயற்திட்டத்தினுள் வீடுகள் ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. | மறுமலர்ச்சி அடிப்படையில் வீடுகள் பெற்றுக்கொடுக்கப்பட்ட 44 நபர்களுக்கு மேலதிகமாக நகர சபையின் சபை மாநாடுக்கு அமைய இன்னும் வீடுகள் இல்லாத 10 பயனாளிகளுக்கு வீடுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. | திட்டமிட்ட பௌதீக இலக்கை அடைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பயனாளிகள் சரியான முறைமையொன்றிற்கு அமைய அடையாளப்படுத்தப்பட்டு வீடுகள் வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | இந்த வீட்டு செயற்திட்டத்திற்கு தொடர்பாக நீர் வழங்கல் போதுமானதாக இல்லாததனால் மேலதிக நீர் வழங்கலொன்று பெற்றுக்கொள்வதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அதிகார சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | செயற்திட்டத்திற்கு தேவையான முதன்மையான உட்கட்டமைப்பு வசதிகள் போதுமானதாக பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு பயனாளிகளுக்கு கிடைக்கப்பட வேண்டிய முதன்மை வசதிகள் மேம்படுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அநுராதப்புரம் ‘‘துருஇதுருகம’’ வீட்டு செயற்திட்டத்தின் மறுமலர்ச்சியின் அடிப்படையில் பெற்றுக்கொடுக்கப்பட்ட 12 வீட்டு அலகுகள் மற்றும் விற்றலின் அடிப்படையில் பெற்றுக்கொடுக்கப்பட்ட 09 வீட்டு அலகுகள் வீட்டு பயனாளிகளுடன் விற்றல் உடன்படிக்கைளுக்கு உடன்பட்டிருக்கவில்லை . அத்துடன் மீளாய்வாண்டில் அதிகார சபையினால் ஹலாவதை வீட்டு செயற்திட்டத்தின் கீழ் 57 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு பயனாளிகளுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டிருப்பினும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் 25 வீட்டு பயனாளிகளுடன் விற்றல் ஒப்பந்தத்திற்கு உடன்பட்டிருக்கவில்லை | மேலதிக தவணை உரிமை ஒப்பந்தம் கையொப்பமிடாத மற்றும் தவணை பணம் செலுத்தப்படாத 19 பயனாளிகளுக்கு எதிராக தற்போது அநுராதபுரம் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஹலாவதை நகர வீட்டு செயற்திட்டத்தின் பயனாளிகள் இது வரையிலும் ஒப்பந்தம் கையொப்பமிடுவதற்காக முன்வராததனால் வருங்காலத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படல் வேண்டும். | வீட்டு பயனாளிகளுக்கு கொடுக்கப்படும் போது அப் பயனாளிகளுடன் ஒப்பந்தங்களுக்கு உடன்படல் வேண்டும். |
| (இ) | செயற்திட்டத்தின் பெறுமதி ரூபா 13.43 பில்லியன் ஆன அதிகாரசபையினால் முன்னைய ஆண்டின் நிர்மாணிப்புக்கள் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த கண்டி, மஹய்யாவ நகர வீட்டு செயற்திட்டத்தின் வேலை மீளாய்வாண்டு இறுதி வரையிலும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொடர்புடைய நிதி வழங்குதலுடன் செயற்திட்டம் ஆரம்பிப்பதற்கான சாத்தியம் காணப்படுபின்றது. | திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களின் நடவடிக்கைகள் முறையாக ஆரம்பிக்கப்பட்டு திட்டமிடப்பட்ட காலத்திற்குள் நிறைவு செய்தல் வேண்டும். |

## 3.3 சர்ச்சை தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையினால் அங்குலான வீட்டு முறையில் காணப்பட்ட ரூபா 134.03 மில்லியன் பெறுமதியான 45 வீட்டு அலகுகள் பண அறவிடல் இல்லாது சுதந்திர கொடுப்பணவு பத்திரமொன்றினூடாக விடுவிக்கப்பட்டிருப்பினும் அப் பணி 2008 இன் 36 இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சட்டத்தின் 26 உறுப்புரையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் வீடுகள் விடுவித்தல் முறைமையொன்று அடையாளப்படுக்கொள்வதற்கு அதிகார சபையினால் இயலாதிருந்தது. | அவ் விடுவித்தல் 2008 இன் 36 இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சட்டத்தின் 26 (1) உறுப்புரையின் பிரகாரம் பத்திரம் வழங்கப்படும் வரை விடயப்பொறுப்பான அமைச்சரிடம் அனுமதி பூரண எழுத்து மூல அனுமதியாக கொடுப்பணவு பத்திரத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்டு இவ் வீடுகள் விடுவிக்கப்பட்டுள்ள அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் விடுவித்தல் முறை தாயாரிக்கப்படுதலின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வரைவு செய்யப்பட்ட முறை சட்ட வரைவாளர் வரை முன்வைக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வீடுகள் விடுவிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் ஹம்பந்தோட்டை வீட்டு கடன் செயற்திட்டத்திற்காக பெற்றுக்கொடுக்கப்பட்ட கடன் பணம் ரூபா 3,656,154 ஆனதுடன் அக் கடன் பணத்திற்கு தொடர்புடைய வட்டி திறைசேரி அல்லது அதற்கு நேரொத்த அமைச்சின் அனுமதி இல்லாது பணிப்பாளர் சபையின் தீர்மாணத்தின் அடிப்படையில் அறவிடாதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | இப் பணம் அறவிடல் தொடர்பாக எதிர்காலத்தில் கவனத்தில் கொள்கினறேன். | பெற்றுக் கொடுக்கப்பட்ட செயற்திட்ட கடன் பணத்திற்கு தொடர்புடைய கடன் வட்டி அறவிடாமை தொடர்பான தீர்மாணம் நேரொத்த அமைச்சினூடாக திறைச்சேரியிடமிருந்து பெறப்படுகின்ற அனுமதியின் அடிப்படையில் மட்டும் செயற்படுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் நகர பிரதேசங்களில் வாழுகின்ற குறைந்த வருமானம் பெறுபவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்காக திறைசேரியினூடாக 2011 வருடத்திலிருந்து 2018 ம் வருடம் வரை 08 வீட்டு செயற்திட்டங்கள் மற்றும் விசிரி | பயனாளிகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த மாடி வீடு பாராமரிப்பு மற்றும் மேம்படுத்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக இவ்வாறு சேர்க்கப்பட்டிருந்த பணம் முன்னைய ஆண்டுகளில் செலவு செய்வதற்கு நேர்ந்துள்ளது. | அதிகார சபை சேர்க்கின்ற கடன் தவணை மற்றும் வட்டி சட்டத்தின் நியமங்களின் படி வேறாக நிதிக்கு வரவு வைக்கப்பட வேண்டியதுடன் கடன் தவணை வட்டி |

| | | | |
|---|---|---|---|
| | வீட்டு கடன் பெற்றுக்கொடுப்பதற்காக ரூபா 2,082.40 மில்லியன் அதிகார சபைக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது. இப் பணம் பயன்படுத்தப்பட்டு வெவ்வேறு செயற்திட்டங்களினூடாக குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த வீடுகளின் பெறுமதி மற்றும் விசிரி வீட்டு கடன் தவணை பயனாளிடமிருந்து மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதிகார சபையினால் மீளாய்வாண்டில் வீட்டு பயனாளிகளிடமிருந்து இவ்வாறு அறவிடப்பட்ட ரூபா 13.85 மில்லியனான கடன் தவணை பெறுமதி 2008 இன் 36 இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் சட்டத்தின் 16 உறுப்புரையின் பிரகாரம் அதிகார சபையின் நிதிக்கு வரவு வைக்கப்படாமல் அதிகார சபையின் வருவாய் செலவுகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. | ஆனால் இந்த நிலை தடுக்கப்பட்டு நடவடிக்கை எடுப்பதற்கு தற்போது கவனம் கொள்ளப்பட்டுள்ளது. | குறைவான வருமானம் ஈட்டுவோரிடமிருந்து மீண்டும் அறவிடுவதற்கு திறைசேரியின் அனுமதி பெறப்படல் வேண்டும் |
| (ஈ) | மீளாய்வாண்டினுள் மனிதவள அபிவிருத்தி நிகழ்ச்சிகளுக்காக ரூபா 19.34 மில்லியன் நிதி ஏற்பாடு பெறப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 3.24 மில்லியன் உலக குடியிருப்பு தின நிகழ்ச்சிகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்ட வருடாந்த திட்டத்தினுள் காசு பாய்ச்சல் குறிப்பின் படி மனிதவள அபிவிருத்தி நிகழ்ச்சிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளுக்கமைய செலவிடப்பட்டிருந்தது. | உலக குடியிருப்பு தின நிகழ்ச்சிகளுக்காக தேவையான நிதி ஏற்பாடு அந் நிகழ்ச்சி திட்டங்களின் கீழ் மதிப்பிப்பட்டு பெறப்பட வேண்டியதுடன் வேறு பணிகளுக்காக பணம் அதற்காக பயன்படுத்தல் கூடாது. |
| (உ) | மீளாய்வாண்டு இறுதியில் 2 வீட்டு செயற்திட்டற்களின் நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்காக திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட ரூபா 63,819,532 ஆன நிதி ஏற்பாடு எல்லை விஞ்சி அதிகார சபையின் பணத்தில் ரூபா 5,030,899 செலவிடப்பட்டிருந்தது. | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. | செலவுகள் வருடாந்த நிதி ஏற்பாடு எல்லைக்குள் ஏற்க்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஊ) மீளாய்வாண்டு இறுதியில் 02 வீட்டு செயற்திட்டங்களுக்காக அதிகார சபை பெற்ற ரூபா 1336.31 மில்லியன் திறைசேரி வழங்கல்களில் ரூபா 38.09 மில்லியன் அந் நோக்கத்திலிருந்து நீக்கப்பட்டு வேறு செலவுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. | திறைசேரி பெற்றுக் கொடுக்கப்படுகின்ற வழங்கல், தொடர்புடைய நோக்கங்களுக்காக மட்டும் பயன்படுத்தல் வேண்டும் |

**3.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடடைய சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) அதிகார சபைக்கு சொந்தமான 05 வீட்டு முறைகளில் காணப்படுகின்ற 83 வீடுகள் 1 தொடக்கம் 04 வருடங்களுக்கிடைப்பட்ட காலம் பாவணைக்குட்படுத்தாது மூடப்பட்டிருத்தலின் காரணமாக அதிகார சபைக்கு சேர்க்கப்பட கூடியதாக இருந்த கூலி வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | இவ் வீடுகள் விடுவிப்பதற்காக அமைச்சரிடம் ஆலோசனை கேட்கப்பட்டுள்ளது. தலவாக்கலை செயற்திட்டத்தின் 54 வீடுகளின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் நிறைவேற்றுமளவும் விடுவிததல் <u>மேற்கொள்ள முடியாதுள்ளது</u>. 2019 ஆகஸ்ட் மாதம் விடுவிக்கப்பட்டு நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | அதிகார சபைக்கு பெறப்படக்கூடிய வருமானம் முறையான திட்டத்திற்கமைய ஈட்டிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) சமூக உயிரூட்டல் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் பகிரப்படுவதற்காக 2014 வருடத்தில் ரூபா 184,995 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட 05 ஜுகி தையல் இயந்திரங்கள் மற்றும் 2016 வருடத்தில் ரூபா 659,970 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட 30 சாதாரண தையல் இயந்திரங்கள் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் பயனாளிகளுக்கு பெற்றுக்கொடுக்கப்படாததுடன் அவற்றின் கிரயம் இறுதி இருப்பிற்கும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த தையல் இயந்திரங்கள் கட்டுப்பாட்டு பிரிவுக்கு சொந்தமாக களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. சந்தர்ப்பங்களிற்கேற்ப அடையாளப்படுத்தப்படுகின்ற பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்படும். 04 சாதாரண தையல் இயந்திரங்கள் மட்டும் தற்போது களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதுடன் விரைவான வேலைத்திட்டத்தின் கீழ் எஞ்சிய தையல் இயந்திரங்கள் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சமூக உயிரூட்டல் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் பகிரப்படுவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் விரைவில் பயனாளிகளுக்கு பெற்றுக்கொடுத்தல் வேண்டும். |

### 3.5 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) அரசின் பெறுகை வழிக்காட்டி கோவையின் 2.8.1 இற்கமைய ஒரு உறுப்பினர் பெறுகை குழு மற்றும் தொழில்நுட்ப ஆய்வு குழு ஆகிய இரு குழுவிலும் உறுப்பினராக இருத்தல் முடியாது. எனினும் ரூபா 94,300 க்கு மர பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு தொடர்புடைய பெறுகையின் போது ஒரே உறுப்பினர்கள் ஏலங்களை திறத்தல், ஏல ஆய்வு மற்றும் பெறுகை குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தி இருந்தனர். | விடயம் தொடர்பில் அறிவுள்ள முகாமைத்துவ மட்டத்தில் பதவி வெற்றிடங்கள் காணப்பட்ட காரணத்தினால் <u>ஒரே உத்தியோகத்தர்</u> இந்த இரு சந்தர்ப்பங்களிலும் பணிபுரிந்துள்ளார். | அரசின் பெறுகை வழிக்காட்டி கோவையின் ஆலோசனைகளுக்கேற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) அரசின் பெறுகை வழிக்காட்டி கோவையின் 5.3.18 (ஆ) இற்கமைய ஏல ஆய்வின் போது பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) கவனத்தில் கொள்ளல் கூடாது. எனினும் அதிகார சபை ஏல ஆய்வின் போது வரி பணத்துடன் விலையை ஆய்வுக்குட்படுத்தியிருந்தது. இந்த நிலையின் அடிப்படையில் பெறுகை நடவடிக்கைகளின் போது வரிக்காக பதிவு செய்யப்படாத ஏலதாரர்களுக்கு நன்மை ஏற்படும் வகையில் அதிகார சபை செயற்பட்டிருந்தது. | வருங்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பெறுகைகளில் ஏல ஆய்வுகள் மேற்கொள்ளும் போது இது தொடர்பாக பூரண கவனம் செலுத்துமாறு தொடர்புடைய ஊழியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | அரசின் பெறுகை வழிக்காட்டி கோவையின் ஆலோசனைகளுக்கேற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.6 ஒப்பந்த செயன்முறை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) ஹலாவத்தை வீட்டு செயற்திட்டத்தின் வடிகால் அமைப்பை உருவாக்குவதற்கு 2015 ஆம் வருடத்தில் ரூபா 2.86 மில்லியன் அதிகார சபைக்கு பெறப்பட்டிருந்தாலும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அப் பணி நிறைவேற்றப்படாததுடன் எந்தவொரு பௌதீக முன்னேற்றமும் காணப்படவில்லை. | ஹலாவத்தை வடிகால் அமைப்பை நிர்மாணித்தல் இன்றைய கால தேவைக்கு பொருத்தமானதாக புதிய திட்டமொன்று தயாரிக்கப்படுவதுடன் அதற்காக பணிப்பாளர் சபை அனுமதி பெற்றதன் பின்னர் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் <u>ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது</u>. | வருடாந்த நிதி ஏற்பாட்டின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்கள் தொடர்புடைய வருடம் ஒப்பிடல் விரைவாக நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அங்குலான சயுருபுர வீட்டு செயற்திட்டத்தின் வியாபார வளாகம் மற்றும் குப்பை நீக்குகின்ற இடம் நிர்மாணித்தல் ஒப்பந்தத்தின் உடன்படு காலம் 2016 செப்தெம்பர் 27 திகதியில் முடிந்திருப்பினும் 2019 மே வரையிலும் செயற்திட்டத்தின் பணிகள் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்ட ரூபா 2,803,447 முற்பணம் தீர்ப்பதற்கு அதிகார சபைக்கு இயலாதிருந்தது. | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. | வருடாந்த நிதி ஏற்பாட்டின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்கள் தொடர்புடைய வருடத்தினுள்ளே விரைவாக நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | லூனாவ வீட்டு செயற்திட்டத்திற்காக நேரொத்த ஆண்டில் ரூபா 90 மில்லியன் செலவிடப்பட்டு முழுவதாக நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தாலும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அச் செயற்திட்டத்தின் பணிகள் நிறைவு செய்யப்படாமையினால் அவ் வீடுகள் பயனாளிகளுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு தாமதமாகியிருந்தது. | லூனாவ வீட்டு செயற்திட்டத்திற்காக புதிய அங்கங்கள் இணைத்தல் அடிப்படையில் நோக்கெல்லை விரிவாகலின் அடிப்படையில் ரூபா 143.141 மேலதிக நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்வதற்காக கெபினட் பத்திரிக்கையொன்று அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. தொடர்புடைய அனுமதியின் அடிப்படையில் மேலதிக வேலைகள் நிறைவு செய்யப்பட்டு செயற்திட்டம் மக்களின் உரிமையாக்குவதற்கு சாத்தியம் காணப்படுகிறது. | திறைசேரியின் வழங்களின் அடிப்படையில் செயற்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களின் பணிகள் திட்டமிடப்பட்டுள்ள காலத்தினுள் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.7 ஏனைய அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட அதிகார சபையின் வளங்கள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| மீளாய்வாண்டில் அதிகார சபையினால் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு மற்றும் தேசிய பொறியியல் கூட்டுதாபனத்திற்கு நான்கு ஊழியர்கள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் அதிகார சபையினால் அவர்களுக்கு சம்பளமாக ரூபா 386,043 செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியில் மீள பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய தொகை ரூபா 45,567 ஆகும். | தற்போது அதிகார சபையின் பணியிலிருந்து வேறு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ள ஊழியர் எண்ணிக்கை ஒன்று ஆகும். | அதிகார சபைக்கு பெறப்பட வேண்டிய பணம் விரைவாக மீளப் பெறப்படல் வேண்டும். |

**3.8 பணிநிலை நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 திகதிக்கு அதிகார சபையின் அனுமதிக்கப்பட்ட பணி நிலை 158 ஆனதுடன் அத் திகதிக்கு பணி நிலை 142 என்பதனால் அதிகார சபையின் பணி நிலையில் 41 வெற்றிடங்கள் மற்றும் 22 அதிகப்படியாக காணப்பட்டன. | வெற்றிடங்கள் எதிர்காலத்தில் இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் அதிகப்படியாக காணப்படும் பதவிகள் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அனுமதிக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. | திறைசேரியினால் அனுமதிக்கப்படுகின்ற பணி நிலை விரைவாக இணைத்துக் கொள்ளல் வேண்டும். |
| (ஆ) 2014 நவம்பர் 12 திகதிய 25/2014 இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் 22 ஊழியர்கள் அதிகார சபைக்கு இணைத்துக்கொண்டிருப்பினும் அப் பதவிகள் அனுமதிக்கப்பட்ட பணிநிலைக்கு உள்ளடக்கப்படுவதற்கு அதிகார சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொடர்புடைய தகவல்கள் முகாமைத்துவ சேவை திணைக்களத்திற்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் அது தொடர்பாக காலத்துக்கு காலம் கடிதங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. | தற்காலிகமாக இணைக்கப்படுகின்ற ஊழியர்கள் அனுமதிக்கப்பட்ட பணி நிலைக்கு உள்ளடக்கப்பட்டு அது திருத்தப்படல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| அதிகார சபையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 2008 இன் 36 இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்திற்கமைய நிறைவேற்றப்பட வேண்டிய பின்வரும் பணிகள் கூட்டிணைந்த திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை | | |

| | | | |
|---|---|---|---|
| (அ) | அரசுக்கு மற்றும் மாகாண நிறுவனங்களுக்கு சொந்தமான காணிகள் அதிகார சபையின் பணிகளுக்காக கையகப்படுத்தல் | 2020-2022 காலத்திற்குரிய திருத்தப்படுகின்ற கூட்டிணைந்த திட்டத்திற்காக காணிகையகப்படுத்தலின் செயற்பாட்டின் முன்னேற்றம் மற்றும் கையகப்படுத்தப்பட்ட காணி தொடர்பாக உள்ளடக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | சட்டத்தில் குறிக்கப்பட்டவை நிறைவேற்றப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பணிகள் கூட்டிணைந்த திட்டத்திற்கு உள்ளடக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | நகர குடியிருப்பாளர்களின் பொருளாதார மற்றும் சமூக நிலை அடையாளப்படுத்திக் கொள்வதற்கு தொடர்புடைய ஆய்வுகள் மேற்கொள்ளல் | செயற்திட்டங்கள் / நிகழ்ச்சிகள் செயற்படுத்ததுவதில் தேவைப்பாட்டை அடையாளப்படுத்திக்கொள்வதற்கு தீவு முழுவதும் சமூக பொருளாதார ஆய்வொன்று நடத்துவதற்காக தொகை மதிப்பு புள்ளிவிபர திணைக்களத்துடன் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தில் குறிக்கப்பட்டவை நிறைவேற்றப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பணிகள் கூட்டிணைந்த திட்டத்திற்கு உள்ளடக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | தேசிய ரீதியில் தொடர்புடையவாறான நகர வீட்டு கடன் திட்டம் செயற்படுத்தல் | திரிய நகர வீட்டு நிகழ்ச்சியீனூடாக கடன் திட்ட முறையொன்று 2012 இலிருந்து திட்டமிடல் மற்றும் தொடர்புடைய அனுமதியின் அடிப்படையில் செயற்படுத்தப்படும். | சட்டத்தில் குறிக்கப்பட்ட நிறைவேற்றப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பணிகள் கூட்டிணைந்த திட்டத்திற்கு உள்ளடக்கப்படுதல் வேண்டும். |

## 4.2 செயல்நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திறைசேரி வழங்கலின் அடிப்படையில் நிறைவேற்றப்பட வேண்டிய செயல்நடவடிக்கைகள் மட்டும் செயல்நடவடிக்கை திட்டத்திற்குள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அதிகார சபையின் வருவாயின் அடிப்படையில் நிறைவேற்றப்படும் செயல்நடவடிக்கைகள் செயல்நடவடிக்கை திட்டத்திற்குள் உள்ளடக்கப்பட்டிருக்கபடவில்லை. | 2018 வருடத்திற்காக உள்ளக வருவாயின் அடிப்படையில் செயற்திட்டங்கள் டையாளம் காண வேண்டியதில்லை. | வருடத்தினுள் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அனைத்து செயற்பாடுகளும் செயல்நடவடிக்கை திட்டத்திற்கு உள்ளடக்கப்படுதல் வேண்டும். |

## 4.3 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட பணி நிலைக்குள் கணக்காய்வு பிரிவுக்காக உள்ளக கணக்காய்வு பதவிகள் மட்டும் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக கடந்த கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளிலும் காண்பிக்கப்பட்டிருப்பினும் மீளாய்வாண்டினுள் அல்லது உள்ளக கணக்காய்வு பிரி வு பெலனுள்ளதாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிராதிருந்ததுடன் அப் பிரிவுக்கு 02 முகாமைத்துவ உதவியாளர்கள் மட்டும் இணைக்கப்பட்டிருந்தனர். | அனுமதிக்கப்பட்ட பணி நிலைக்குள் கணக்காய்வு பிரிவுக்கு பதிலாக அனுமதிக்கப்பட்ட கணக்காய்வு பதவிகள் மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளதனால் கணக்காய்வு பிரிவை பெலனுள்ளதாக்குவதற்காக பரிந்துரைகள் கட்டுப்பாட்டு பிரிவுக்கு கொடுக்கப்பட்டுள்ளதுடன் இன்னும் அதற்காக தீர்வுகள் முன்வைக்கப்படவில்லை. | உள்ளக கணக்காய்வு பிரிவு பெலனுள்ளதாக பேணப்படல் வேண்டும். |

## 4.4 பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிறுவனத்தினால் பயனுள்ள கட்டுப்பாட்டு உத்தியொன்றான வரவு செலவு பயன்படுத்தப்பட்டிராததுடன் வரவு செலவுக்குட்பட்ட செலவு உண்மையான செலவுடன் ஒப்பிடுகையில் 25 சதவீதத்திலிருந்து 395 சதவீதம் வரை கவனிக்கப்பட வேண்டிய மாற்றங்கள் அவதானிக்கப்பட்டதில் வரவுசெலவு ஆவணம் பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டாளர்களாக பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | வருடாந்த வரவுசெலவு ஒதுக்கத்திற்குள் பணிகள் முகாமைத்துவப்படுத்தல் தொடர்பாக தற்போது <u>அதிகார சபையினால் விசேடமாக கவனிக்கப்பட்டு</u> வருகின்றது. | வரவு செலவு ஆவணம் பயனுள்ள கட்டுப்பாட்டு உத்தியாக பயன்படுத்தல் வேண்டும். |

## 4.5 நிலைப்பேறான அபிவிருத்தி இலக்கை அடைதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய ஒன்றியத்தின் 2030 ‘‘நிகழ்ச்சி நிரல்’’ பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டிற்கு தொடர்புடைய நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் தன் நோக்கெல்லைக்கு கீழ் எடுக்கப்படும் | பௌதீக மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சியினூடாக வீட்டு தீர்வுகள் பெற்றுக்கொடுத்தல் மற்றும் மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சியினூடாக இலக்கு சமூகத்தின் வாழ்க்கை தரத்தை உயர்த்தல் நிகழ்ச்சிகள் | ஐக்கிய ஒன்றியத்தின் நியாய பத்திரத்திற்கு அமைவாக நிலைபேறான அபிவிருத்தி இலக்கை விரைவில் அடையாளப்படுத்திக்கொள்ளல் வேண்டும். |

| | |
|---|---|
| பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்படுத்தல் வேண்டும் என்பது தொடர்பாக அறியப்பட்டிருக்கவில்லை. அக் காரணத்தினால் நிலை பேறான அபிவிருத்தி நோக்கம், குறிகோள் மற்றும் நோக்கங்களை அடையும் முறை, இலக்குகளை அடைதலுக்காக உரிய குறிக்காட்டியும் அடையாளப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மற்றும் செயற்திட்டம் செயற்படுத்துவதீனூடாக 10 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்கு (கூட்டிணைந்த திட்டம் 2017-2019) கவனம் செலுத்தப்பட்டுள்ளது. |